**I.D.O.P. No. 287/2019**

**12.01.2024**

ம.த.சா. 1- திருமதி. மெர்சி, த/பெ. விஜயன்

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்.</u>

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

பெங்களூருவில் இருந்து நாங்கள் வந்தபிறகு முடிச்சூரில் வசிக்கலாம் என்று எதிர்மனுதாரர் தான் சொல்லி ஏற்பாடு செய்தார். முடிச்சூரில் இருந்தபோது எதிர்மனுதாரர் வீட்டிற்கு தாமதமாக வந்ததால் எனக்கு அதுகுறித்து வருத்தம் இருந்தது. அவ்வாறு எதிர்மனுதாரர் தாமதமாக வந்ததால் முடிச்சூரில் நாங்கள் வசித்த வீட்டிற்கு அருகிலேயே எனது பெற்றோர் வீடு இருந்ததால் அவர்களுடனேயே சேர்ந்து வசிக்கலாம் என்று எதிர்மனுதாரரிடம் நான் கேட்கவில்லை. முகப்பேரிலிருந்து முடிச்சூருக்கு எனது மாமனார் மற்றும் எதிர்மனுதாரர் தான் எங்களை பொருட்களுடன் அழைத்துச்சென்றார். முடிச்சூரிலிருந்து எதிர்மனுதாரர் என்னை என் பெற்றோர் வீட்டிற்கு துரத்திவிட்டார் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. எதிர்மனுதாரர் வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருப்பதாக அவரே என்னிடம் இமெயில் மூலமாக 2021ம் வருடம் கூறினார். அந்த இமெயிலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு இமெயில் மூலமாக மேற்படி விவரத்தை அறிந்தபிறகு எனது மாமனாரிடம் எனது அப்பா மூலமாக இதைப்பற்றி தெரிவித்தேன். எனது மாமனாரும் அதனை துண்டித்துவிடலாம் என்று கூறினார். எதிர்மனுதாரருடன் நான் வாழ்ந்த காலக்கட்டத்தில் சந்தோசமாக வாழ்ந்தோம் என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ உண்மையிலேயே விருப்பம் இல்லை என்றாலும் குழந்தைக்கு தகப்பனார் வேண்டும் என்பதற்காக மட்டுமே தாவா மனு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தொடர்ந்து நான் எதிர்மனுதாரரை துன்புறுத்தி வந்தேன் என்றாலும் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டி வந்தேன் என்றாலும் அதன்காரணமாகவே எதிர்மனுதாரர் என் மீது விவாகரத்துக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2015ம் வருடம் மே மாதம் முதல் எதிர்மனுதாரர் ரூ.5,000/- எனக்கு செலுத்தி

வந்தார் என்றால் சரிதான். ஓரிரு மாதங்கள் தவிர ரூ.5,000/- மாதம் மாதம் செலுத்தி வந்தார். தற்போது 3 மாதம் ரூ.10,000/- செலுத்தி வருகிறார். 02.03.2014 அன்று எனக்கு குழந்தை சிசேரியன் மூலமாக பிறந்தது. எதிர்மனுதாரர் என்னை தொடர்ந்து துன்புறுத்தியதால் தான் எனக்கு சிசேரியன் மூலமாக குழந்தை பிறந்தது என்று தவறாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 2014ம் வருடம் ஜீன் மாதம் எனக்கு உணவு அலர்ஜியாகி மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தேன். 2014 வருடம் ஜீன் மாதம் நான் தற்கொலை முயற்சி செய்தேன் என்று எதிர்மனுதாரர் தனது விவாகரத்து மனுவில் சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியும். அவ்வாறு தற்கொலை முயற்சி செய்யவில்லை என்றும் உணவு அலர்ஜிக்காக தான் மருத்துவமனையில் அட்மிட் ஆகியிருந்தேன் என்று நிரூபிப்பதற்கு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் உணவு அலர்ஜியாகி மருத்துவமனையில் அட்மிட் ஆனது குறித்த ஆவணங்கள் எதிர்மனுதாரரிடம் உள்ளது. இந்த விவரத்தை எனது கணவர் தாக்கல் செய்த வழக்கின் எதிர்உரையில் சொல்லியுள்ளேனா என்று எனக்கு ஞாபகமில்லை. அன்றைய தினத்திற்கு முன்பாக இரவு வெளியில் பிரியாணி சாப்பிட்டதால் உணவு அலர்ஜி ஏற்பட்டது. என் கணவர் வேறு எந்த பெண்ணுடன் தொடர்பில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ உண்மையிலேயே விருப்பம் இல்லை என்றாலும் அவ்வாறு விருப்பம் இருந்து இருந்தால் 4 வருடத்திற்கு முன்பாகவே சேர்ந்து வாழக்கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரருடன் சமரச மையத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் சமரச பேச்சு வார்த்தைக்கு ஒத்துவரவில்லை என்று சொல்லியுள்ளேன். எதிர்மனுதாரர் என் மீதும் குழந்தை மீதும் அன்போடு இல்லை என தவறாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறானவை என்றால் சரியல்ல. தவறான சங்கதிகள் குறித்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனக்கு உண்மையிலேயே எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- S.Selva Sundari
Principal District and Sessions Judge,
Tiruvallur.